# சபரிமலை ஐயப்பன் தோத்திரமாலை



வெளியீடு : பாலாஜி பதிப்பகம்
32 Morrison Road
Hayes.

உ



# சபரிமலை ஐயப்பன் தோத்திமாலை

தொகுப்பு ஆசிரியர்

ஷீரடி வேல். பாலாஜி

விற்பனையாளர்

பாலாஜி புத்தகசாலை

**HAYES**

சபரிமலை ஐயப்பன் தோத்திரம்

பிரதிகள்: 2000

முதற்பதிப்பு: 09-12-2017

பதிப்புரிமை: பதிப்பாசிரியருக்கு

வெளியீடு: பாலாஜி பதிப்பகம்

Hayes

## பதிப்புரை

## சாமியே சரணம் ஐயப்பா

பக்தர்களே!

சபரிமலை ஐயப்பனின் இயற்பெயர் தர்மசாஸ்தா. இது தவிர மணிகண்டன் ஹரிஹரபுத்திரன், ஐயன் சபரிகிரி வாசன், பூதநாதன், ஹரிஹரநந்தன், ஹரிஹரன் எனப் பிற பெயர்களும் இருக்கின்றன. மாலையிட்டு விரதமிருந்து பயணிக்கின்ற ஐயப்ப பக்தர்கள் இருமுடி தாங்கி, 18 படிகள் ஏறிய பிறகே பகவானை தரிசிக்க முடிகிறது. இந்த 18 படிகளுக்கும், பல தரப்பட்ட நிகழ்வுகளுக்கும் தொடர்பிருக்கிறது என்கின்றனர். பழம் பெருமைமிகு இந்தியத் திருநாட்டில், தேவாசுரயுத்தம் 18 ஆண்டுகள், ராம ராவண யுத்தம் 18 மாதங்கள், பாண்டவ கவுரவ யுத்தம் 18 நாட்கள் நடந்திருக்கிறது. அதர்மம் அழிந்து தர்மம் நிலை நாட்டப்பட்ட "குருஷேத்திரப் போர்" 18 நாட்கள் நடந்ததால் இதன் பேரிலேயே அடையாளமாக 18 படிகள் அமைக்கப்பட்டதென்ற கருத்தும் இருக்கிறது.

பகவத்கீதையின் 18 அத்தியாயங்களின் பேரிலேயே, 18 படிகள் குறிக்கப்படுகிறது என்போரும் உண்டு. 18 ஆகமங்கள் இருக்கின்றன, 'ராஸேஸ்வர தரிசனம்' என்ற நூலில் பாதரசத்தை 18 முறைகளில் விரிவுபடுத்தும் செய்தி பேசப்பட்டுள்ளது.

ஷியாம் சுந்தர் கோஸ் சுவாமி என்பவர் சாண்டில்ய உபநிஷத்திலிருந்து காட்டும் மேற்கோளின்படி, மனித தேகத்தில் 18 இடங்களில் உணர்வு கட்டுப்பாட்டு மையங்கள் இருக்கின்றனவாம். தமிழ் இலக்கியங்களிலும்

18க்கு முக்கியத்துவம் உண்டு. 'பிங்கள நிகண்டு' 18 தேவர்களை, 18 தர்ம சாஸ்திரங்களை, 18 யுகங்களை, 18 குற்றங்களை பேசுகின்றது. மூலகுரு சுருக்கமும், அகத்தியர் பரிபாஷையும், 18 மொழிகளைக் குறிக்கின்றன. வைத்திய சூரணம் 18 ஜாதிகளையும், சுப்பிரமணியர் ஞானம் 18 யுகங்களையும், விவரிக்கின்றன. தாண்டவம் 18 வகையான இசைக்கருவிகளைச் சொல்கிறது.

நம் தொன்மைத் தமிழன் மெய்யெழுத்துக்களும் 18 தான் என்பது மேலும் சிறப்பு. ஐயப்ப பக்தர்களே ஐயப்பன் தோத்திரமாலை பாராயணம் செய்து பகவானின் அருளைப் பெற்று "வாழ்க வளமுடன்"

சாமியே சரணம் ஐயப்பா

என்றும் இறைபணியில்

VIDI – விநோத்

(பதிப்பாசிரியர்)

உ

சிவமயம்



# விநாயகர் போற்றி

ஓம் அருமைச் செல்வவிநாயகா போற்றி
ஓம் ஆனந்த வாழ்வே அருளா போற்றி
ஓம் இடம்படு விக்ன விநாயக போற்றி
ஓம் ஈண்டிய செல்வ இருப்பே போற்றி
ஓம் உள்ளம் அமரும் உத்தமா போற்றி
ஓம் ஊர் நவசக்தி உகந்தாய் போற்றி
ஓம் எந்தன் சந்தோன் மூத்தோய் போற்றி
ஓம் ஏழுலகந் தொழ நின்றாய் போற்றி
ஓம் ஐயா கணபதி வருவாய் போற்றி
ஓம் ஒன்று பலவாய் உள்ளாய் போற்றி
ஓம் ஓங்காரப் பரம்பொருளே போற்றி
ஓம் ஒளவியமில்லா அருளே போற்றி
ஓம் அதே இன்பம் ஆண்டாய் போற்றி
ஓம் கன்னி மூலகணபதியே போற்றி போற்றி

உ

சிவமயம்

# சாமியே சரணம் ஐயப்பா!



## ஸ்ரீ ஐயப்பனின் 1008 போற்றிகள்

(மந்திரங்களுடன் "சரணம் பொன்னையையப்பா" சேர்த்து படிக்கவும்)

1 அகஸ்தீச்வர சுதா
அகத்தியரக்கருள்வோனே
அகந்தை அழிப்பவனே
அகமாயை களைவோனே
அகண்ட வடிவமே
அகண்ட பரிபூரணா
அகக்கடவுள்
அகத்தில் உறைந்தவனே
அகங்களிக்கச் செய்வாய்
அகக்கண் தெரியச்செய்வாய்

11 அகிலேச்வரிசுதா
அகிலாண்டேச்வரி புத்ரா
அகிலேசா மகனே

அகிலநாயகனே
அகோரன்மகனே
அக்கினிதேவன் அடிபணியும்
அக்ரமத்தை அழிப்பாய்
அங்கையற் கண்ணம்மை மைந்தா
அங்கஹீனம் அகற்றினாய்
அசகாய சூரனே

21 அசூயை அகற்றுவோனே
அச்சந் தவிர்ப்பவனே
அச்சுதன் மகனே
அஞ்ஞானம் போக்குவோனே
அஞ்ஞாநெஞ்சம் அளிப்பாய்
அடியார் துயரகற்றும்
அடியினை தொழுவோம்
அடியவர்க் கடியனே
அடிமைத்தளை அகற்றுவாய்

31 அடைக்கல மடைந்தோம்
அட்டமூர்த்தியின் மகனே
அட்டமா சித்தியளிக்கும்
அட்டதிசைக் கதிபதி
அட்டலஷ்மிசுதனே
அட்டபாலர் சோற்றியவர்
அட்டநாகத் ததிபனே
அணிபெறும் படைப்பே
அணியே அரும்மணியே
அணைந்திட ஓடிவா
அண்டநாயகிசுதா

41 அண்ணாமலை புதல்வா
அண்டினோரை ஆதரிக்கும்
அண்டசன் வளர்த்தவா
அண்டர் தொழும்பாதனே
அதிர்வெடிப்பிரியனே
அதிசய பிறவியே
அதிகுண அப்பனே

அதிமோஷம் அளிப்பவனே
அதிதெய்வம் நீயல்லவோ
அத்திசயணன் மகனே

51 அநுக்ரஹம் செய்ய வேணும்
அந்தரியின் மகனே
அந்திவண்ணன் மகனே
அபயம் அருள்வோனே
அபவாதம் அகற்றுவாய்
அபாயம் வராது காப்பாய்
அபிராமி புதல்வனே
அபிலாசை பூர்த்தி செய்வாய்
அப்புலிங்கேஸ்வரர் சுதா
அப்பனுக்கு அன்புடையாய்

61 அமரத்தன்மை அளிக்கும்
அமரர்க்கு உபகாரா
அமரர் தினந்துதிக்கும்
அமரவாழ்வு அருள்வாய்
அமராவதியோர்க்கருளும்
அமரே சபூஜிதா
அமரிஅருமை மைந்தா
அமிர்தலிங்கன் சுதா
அமுதம் அளித்திடுவாய்
அமைதியை அளிப்பாய்

71 அம்பிகையின் புதல்வா
அம்பணத்தி அருமை சுதா
அம்பரீசன் மகனே
அம்பலத்தடியோன் சுதா
அம்புவில் தரித்தோனே
அம்புஜ மலர்ப்பாதனே
அம்பலவன் புதல்வனே
அயன் மனைவிமகனே
அரசை அளித்தவனே
அரனருள் மகனே

81 அரவணையாள் சுதனே
அரவிந்தாஷன்சுதா
அரங்கநாதன் மகளே
அரவாபரணன் சுதா
அரன்மகன் தம்பியே
அரியமா ஒளியே
அரி உனக்கரியானான்
அரிமாவாகனனே
அரியேறி மகனே
அரிஹர சுதனே

91 அரிமருகன் தம்பியே
அருணோதய வடிவே
அருட்கலையுருவே
அருளே பொருளே
அருள் மயமயனவனே
அருணகிரிக்கன்பன்தம்பி
அருள்கொடையோனே
அருச்சனைபுரிகுவோம்
அருங்கலை அருள்பவனே
அருள்தர அவதரித்தாய்

101 அருமருந்தருள்வாய்
அருமை மிகுந்தவனே
அருந்தவக்கனியே
அருளால் அழைப்பவனே
அரும்பிணி தீர்ந்தவனே
அருளும் அளித்திடுவாய்
அருள்சுரக்கும் தெய்வமே
அருமையாய் அவதரித்தாய்
அர்த்தநாரி பாலகனே
அலர்மேலு மங்கைசுதா

111 அலங்காரப் பிரியனே
அலகைக் கொடியாள்சுதா
அலைமகள் அருள்சுதா
அலைகடல் அமுதே
அலைகடல் உருவே

அவனிதழைக்கச் செய்வாய்
அவஸ்தை அணுகாதுகா
அவிர்மதி முன்னே
அழகிற்கோர் வடிவமே
அழகான தெய்வமே

121 அழலாடிப்பிரியசுதா
அழகன் அருமகனே
அழலேந்தி மகனே
அமுதா நதீசனே
அழுதிட்டால் ஆதரிக்கும்
அறமூர்த்தி அருள்வாய்
அறநெறி உடையோனே
அறவழி காட்டுவாய்
அறிவைப் புகட்டுவோனே
அறியா வறிவுகொடு

131 அறியாதவன்போல் நடிப்பாய்
அறிவுச்சுடரே
அறிவாகரனே
அறியாமை போக்கடிப்பாய்
அறுமுகன் தம்பியே
அற்புத உருவே
அற்புதை மகனே
அனலாடி மகனே
அனந்தரூபன் மகனே
அனந்த வீரியங் கொண்டாய்

141 அனந்தையின் மகனே
அனந்தஞானி சுதனே
அனாத்ரசுஷகனே
அனுபூதியால் அறிந்தோம்
அனுராகங் காட்டியருள்
அனுகூலம் செய்பவனே
அனுபவ பலன் கண்டோம்
அனுதினம் தொழுவோம்
அனூரகன் மகனே
அன்னியனென்றெண்ணாதே

151 அன்னபூரணி புதல்வா
அன்னை தந்தை நீயல்லவோ
அன்னபஞ்சம் அகற்றிடு
அன்புள்ள அப்பனே
அன்னதான பிரபுவே
அன்னவாகனன் மகனே
அன்னவஸ்திரவருள்
அன்பர் மகிழ்ந்திடச் செய்
அன்புக்கடவுளே
அன்பருக்கு அன்பனே

161 அன்னமூர்த்தி வளர்த்த
அன்னக்கொடியோன் புகழ்ந்த
ஆகன்தம்பி நீயல்லவோ
ஆகர்சக்தியோனே
ஆகண்டலன் துதிக்கும்
ஆகமிலி சொரூபனே
ஆகாச காமியே
ஆகாசப்பதி போற்றும்
ஆகாயலிங்கனசுதா
ஆகீசன் இளையோனே

171 ஆகுகன் தம்பியே
ஆக்கம் மிகுந்தவனே
ஆக்கையைக் காத்திடுவாய்
ஆசான் எமக்கு நீயே
ஆசாரப்பிழை பொறுப்பாய்
ஆசி அருளவேணும்
ஆசிரியக்கருளிய
ஆசை அகற்றுவோனே
ஆஸ்திகர் அன்பாய்த் துதிக்கும்
ஆடல்கண்டானந்திப்போனே

181 ஆடி மகிழ்ந்திடுவோம்
ஆண்மூர்த்திக்கவதரித்த
ஆண்டியப்பன் தம்பியே

ஆதரிக்கும் தெய்வமே
ஆதிபராபரனே
ஆதிலட்சுமி மகனே
ஆதித்தியன் சுடரொளியே
ஆதியே ஜோதியே
ஆதித்தர் போற்றும் நாதா
ஆதிதேவன் மகனே

191 ஆதி வயலூரான் தம்பி
ஆதிக்கடவுளே
ஆதி மூலம் சுதனே
ஆதி நாராயணனீன்ற
ஆதிசக்திப்பிரிய சுதா
ஆதித்தியன் சுதா
ஆத்ம போதம் அருள்வோனே
ஆத்ம சக்தியைத் தரும்
ஆபரணந் தரிப்போனே
ஆபத் பாந்தவனே

201 ஆமையானோன் மகனே
ஆயிரங்கண்ணன் போற்றும்
ஆயும் யாழ் முனிபோற்றும்
ஆயுளும் நீடிக்கச் செய்
ஆரணி அரும் மகனே
ஆருயிருக்கோருயிரே
ஆர்வமிகக் கொண்டு வந்தோம்
ஆலமுண்டவன் மகனே
ஆலமர் கடவுள் சுதா
ஆவியே ஸஞ்சீவியே.

211 ஆழியின் அமுதே
ஆளிஊர்தி மகனே
ஆருதாரம் கடந்தோனே
ஆறுபடை வீடுடையான் தம்பி
ஆற்றலைக் கொடுப்பாய்
ஆனந்த பாஷ்பம் பெருகும்
ஆனந்த நித்திரை செய்யும்

ஆனந்த ரூபனே
ஆனந்த வல்லி சுதா
ஆனைமுகன் தம்பியே

221 இகபரசாதனமருள்
இங்கெங்கும் நிறைந்தவனே
இசைமாது வளர்த்த
இசையின் இன்பமே
இசைப்பாடிப் பணிகுவோம்
இச்சா சக்தி மகனே
இஷ்டதெய்வம் நீயன்றோ
இடரைத் தீர்ப்பவனே
இடப வாகன் சுதா
இடைக்கொடியோன் புகழும்

231 இடைச்சங்க புலவர் புகழ்
இணங்காரும் இணங்குவார்
இணையில்லாத் துணையே
இதயம் இனித்திடும்
இதம்பண்ணல் உன்கடன்
இதிகாசம் புகழும்
இந்திரனுக் கரசளித்தாய்
இந்திரலோகத்தை அளித்த
இந்திரனுக்கு வாழ்வளித்த
இந்துமதம் தழைத்தது

241 இந்து முஸ்லீம் இணைத்தாய்
இமையவல்லி மகனே
இமையவல்லி சுதனே
இமையவர் பூஜிப்போனே
இம்மைச் சுகங்கள் தரும்
இயம்பப்போமா உன் புகழ்
இயக்கமாதர் நடம்புரிவர்
இரமாபதிசுதா
இரம்மியமாகச் செய்வாய்
இரண்ய ஸம்ஹாரன் மகனே

251 இரவிக்கு இரவியே
இரட்சிப்பு அளிப்பவனே
இரக்கம் மிகுந்தவனே
இராஜலஷ்மி சுதனே
இராஜசேகரன் மகனே
இருமுடி சுமந்துவந்தோம்
இருவினை அறுக்கும்
இருசுடர்வதனா
இருமுடிப்பிரியனே
இருமைக்கும் அருள்சுரக்கும்

261 இருகேசன் மகனே
இருமூர்த்தி மகனே
இருள்நீக்கி ஒளிதாராய்
இருமங்கை மணாளனே
இல்லறம் நல்லறமாக்கும்
இழிவு நீங்கிடச்செய்
இளநீர்ப்பிரியனே
இளைப்பை உடனே மாற்றும்
இறவாதிருக்க அருள்
இறைவியின் மகனே

271 இறைவன் அருமை மைந்தா
இன்பம் பெருகிடச் செய்
இன்பந்தருள்வாய்
இன்பத்தின் இன்பமே
இன்சொல் இயம்புவாய்
ஈகையில் சிறந்தோனே
ஈசன் ஈன்ற எந்தையே
ஈசானன் புதல்வா
ஈசானிய தேவன் வணங்கும்
ஈச்வரிசுதனே

281 ஈஸ்வரன் மகனே
ஈடில்லாத இன்பமே
ஈடில்லாத் தெய்வமே
ஈலிக்கை ஆயுதா

ஈசன் மொழித்திடுவாய்
ஈன்றவள் போற்றியவா
ஈன்றவள் புகழ் ஏற்றியவா
உக்கிராஷன் சுதனே
உக்கிருஷ்டமானவனே
உணர்விற் குணர்வே

291 உணவு கஷ்டம் ஓட்டிடு
உண்மை விளங்கச் செய்வாய்
உண்மை உரைப்பவனே
உண்ணாமலை தேவிசுதா
உத்தமி புதல்வனே
உத்தமனே நித்தியனே
உமாமகேஸ்வரன் சுதா
உமாபதி மகனே
உமையாள் மகனே
உம்பர்கள் புகழ்ந்து கூறும்

301 உயர்வாய் வாழ அருள்
உயிரை அளித்தவனே
உயிர்களைக் காப்பவனே
உருத்திரமூர்த்தி மகனே
உலகெல்லாம் போற்றுவோனே
உலகைக் காப்பவனே
உலகமாதா சுதா
உறுதியாய் உனைநம்பினோம்
உறுதி கொண்டவனே
உற்றதுணை நீயல்லவோ

311 உள்ளத்தின் இன்பமே
உள்ளம் உருக்கியவா
உனது காளை நினைந்தோம்
உனக்கிணை உலகில் உண்டோ
உனை நினைந்துருகினோம்
உன்னைப்போல் நான் கண்டதில்லை
ஊக்கம் மிகுந்தவனே
ஊக்கத்தை அருளுவோனே
ஊமையையும் பேசவைத்தாய்

ஊரூராய்ச் சுற்றினோம்
321 ஊரெல்லாம் செழிக்கச் செய்வாய்
ஊழையும் வெல்ல அருள்
ஊழ்வினை அகற்றிவிடு
ஊனுடை தேவை உதவு
ஊனுடற் பிணியகற்று
எங்கும் நிறைந்தவனே
எங்குமுன் திருவருள்
எங்கள் இடர் தீர்ப்பாய்
எட்டுக்குடி வேலன் தம்பி
எண்டோளி மகனே

331 எமதர்மன் வணங்கும்
எமையாளும் இறைவா
எல்லாம் வல்லவனே
எளிமை கண்டிரங்குவோனே
என்முகம் பாராய்
ஏகசொரூபா
ஏகாந்தருக்குத் தம்பியே
ஏகாந்தமாய் வீற்றிருக்கும்
ஏகாம்பர நாதர் மைந்தா
ஏக்கந் தவிர்த்திடு

341 ஏழைக்கருள்பவனே
ஏழைமை போக்கிவிடு
ஏற்றம் அளிப்பவனே
ஐக்யானு பூதிஅருள்
ஐங்கரன் தம்பியே
ஐந்தொழில் புரி அருளே
ஐம்புலச் சேட்டை நீக்கும்
ஐம்பிழை தீர்ப்பவனே
ஐம்பூதத்திற்காதியே
ஐயப்பா தெய்வமே

351 ஐயந் தவிர்ப்பவனே
ஒப்பற்ற தெய்வமே
ஒருமண்டல விரதமிருந்தோம்

ஒவ்வொருயிருக் கருளும்
ஒளிபடைத்த கண்ணாய்
ஒளியே அகண்டவெளியே
ஒற்றுமை ஓங்கச் செய்வாய்
ஒன்றுபட்டு வரச்செய்த
ஓங்காரப் பொருளே
ஓதாது உணர்ந்தவனே

361 ஓம்பராசக்தி சுதனே
ஓம்மஹாசக்தி பிரியனே
ஓம்சிவசக்தி சுதா
ஓவாமுயற்சி ஈவாய்
ஔஷத பானவனே
ஔதாரியத்தின் ஆழியே
ஔபாசகரின் நிதியே
ஔவியப் பேய்கள் அடக்கு
கங்கைவேணியன் சுதா
கங்கைமுடியோன் மகனே

371 கங்காளன் புதல்வா
கங்காளியின் மகனே
கஜகர்ணா சகோதரா
கடகம்பனுக்கன்பான தம்பி
கடவுளர் போற்றும் பாதா
கடனை ஒழித்திவாய்
கடிதினில் வந்தருள்வாய்
கடுமையைக் களைவோனே
கடைத்தேற்றுவாய் எம்மை
கட்டிக்கரும்பே தேனே

381 கட்டுப்பாட்டைக் காட்டிய
கணபதி தம்பியே
கணாதிபர் சகோதரா
கண்டெடுத்த மணிகண்டா
கண்ணின் கருமணியே
கண்டவர் மயங்கிவிழும்

கண்ணைக் கொடுத்தவனே
கண்டேனுன் மகிமையெல்லாம்
கண்கண்ட தெய்வமே
கதறிடச் செய்திடாதே

391 கதறினால் கண்துடைக்கும்
கதாரன் மகனே
கதிதரும் மணியே
கதிர்விரி முகனே
கதிரேசன் தம்பியே
கதிர்காமக்கந்தன் தம்பி
கந்தக்கடவுள் சோதரா
கபாலியின் மகனே
கபிலருக்குத் தம்பியே
கம்பனின் தில்லை கனிபாட

401 கவிபாட அருள்வாய்
கரிமுகற்கிளவல் தம்பி
கரிமுகனுக்கினையோய்
கருணை மிகுந்தவனே
கருத்தினில் நிலைத்திடு
கருணை புரிந்திடுவாய்
கருத்துக்கிசைந்தவனே
கரும வினையகற்று
கலியுக வரதா
கலியப்பெருமாள் சுதா

411 கலிக்காவதாரன் சுதா
கலையூர்தி கண்மணியே
கலையுணர் புலவன் தம்பி
கலைமகன் மகனே
கலையானத்தி சுதனே
கலைமகள் போற்றிய
கல்விக் களஞ்சியமே

கல்வியருளுவாய்
கவலை விலக்கிவிடு
களபப்பிரியனே

421 களிப்படையச் செய்வாய்
களைப்பைத் தெளியச் செய்வாய்
கள்ளத்தனத்தைப் போக்கு
கற்பூரப் பிரியனே
கற்பக தருவே
கற்றவர் போற்றும்
கனிந்த கனிரசமே
கன்னியின் புதல்வனே
காக்கும் கடவுளே
காங்கேயன் தம்பியே

431 காசிவிஸ்வசன் மகனேன
காசியினில் புகழாதார் யார்
காசிபமைந்தன் போற்றும்
காடுமலை ஏறிவந்தோம்
காட்டில் கிடைத்தவனே
காப்பாற்றுதல் உன்பாரம்
காமாஷி மகனே
காயத்திரி மகனே
கார்மயில்வாகனன் தம்பி
கார்த்திகேயன் தம்பியே

441 கார்த்திகை அருள் புதல்வா
கார்த்தியாயினி சுதனே
காலகாலன் மகனே
கால ஸம்ஹாரன் மகனே
காலதேவன் பாதம் பணிந்த
காலகாலத்தில் அருள்
கால்நடையாய் நடந்து வந்தோம்
காளத்தீஸ்வரன் மகனே
காளித்தேவிப்பிரியசுதா
காளிப்பட்டிக் கந்தன் தம்பி

451 காளைவாகன் மகனே
கிரியா சக்திப்பிரிய சுதா
கிருஷ்ணவதாரன் சுதா
கிருபை புரிபவனே
கீர்த்தி உயர்த்திடுவாய்
கீர்த்தி அளிப்பவனே
கீழ்மை அகற்றுவாய்
கீழ்மேல் அற்றவனே
குகன் சகோதரனே
குங்கும அபிஷேகனே

461 குஷ்டத்தை தீர்த்தவனே
குஞ்சரி மணாளன்தம்பி
குண்டலியின் மகனே
குதிரை சவாரியனே
குபேரதேவன் துதிக்கும்
குமரியின் குழந்தாய்
கும்பேஸ்வரன் மகனே
குருவின் குறை தீர்த்தவா
குருவுக்கும் குருவே
குருதஷினை கொடுத்தாய்

471 குழந்தைக்குறை தவிர்க்கும்
குழந்தையாய் ஆனவனே
குறை தீர்ப்பவனே
குறைகளைத் தவிர்ப்பாய்
குறைகளைப் போக்கி அருள்
குன்றுதோறாடுவோன் தம்பி
குன்றறிந்தோன் தம்பியே
கூர்மவதாரன் மகனே
கூலி கொடுப்பவனே
கூனை நிமிர்த்தவனே

481 கெங்காதரன் மகனே
கெங்காதேவி போற்றிய
கெஜலெஷ்மி மகனே
கெட்டகனவை போக்கும்
கெருடவாகன் சுதனே
கேசவன் மகனே
கேட்டதை அருள்பவனே
கைதூக்கி விடுவாய்
கைத்தொழில் வளர்க்கச் செய்

491 கைலையாளி மகனே
கைலாசபதி சுதா
கொடியாரை அழிக்கும்
கொடுக்கும் கொடையாளியே
கொண்டல் வண்ணன் மகனே
கொற்றவை குமாரா
கோடிக்குமேல் ஐயப்பன்மார்
கோடிதீபம் மலையிற் கண்டோம்
கோபப்பேயை அகற்று
கோவிந்தன் மகனே

501 கௌஸ்துப மணியே
கௌரியின் அருமகனே
க்ரஹதோஷ நிவாரணா
சக்தியளித்திடும்
சக்ரகதாதரன் சுதா
சக்ராயுதத்திதநயா
சக்ரபாணி புதல்வனே
சக்திக் கனலே காவாய்
சக்திப்பிரியசுதனே
சக்ரதரன் மகனே

511 சங்குதரித்தோன் மகனே
சங்கரநாராயணன் சுதா
சங்கீதப்பிரியனே

சசிமணாளன் போற்றும்
சஞ்சலம் தவிர்த்திடுவாய்
சண்டிகேஸ்வரர் போற்றும்
சண்டிகை மகனே
சதானந்தன் மகனே
சதாசிவன் மகனே
சதுர்ப்புயன் மகனே

521 சத்துருஸம்ஹாரனே
சத்குருநாதனே
சக்திவடிவேலன் தம்பி
சந்தானலஷ்மி சுதா
சந்த்ர தரன்மகனே
சந்திரன் போற்றியவா
சபரிகிரிசா
சபரி பீடத்தமர்ந்த
சமதர்ம நிலவிய
சமரியின் சுதனே

531 சம்ஹார மூர்த்தி மகனே
சயமகள் பிரியசுதா
சரஸ்வதி புதல்வனே
சரம் தொடுத்தவனே
சரவணபவன் தம்பி
சர்ப்பாபரணன் மகனே
சாஸ்வதனே
சாதுஜனப் பிரியனே
சாந்தப் பொலிவருள்வாய்
சாபம் தீர்த்தவனே

541 சாமிநாதன் தம்பியே
சாமுண்டியாள் சுதனே
சாம்பசிவன் மகனே
சாவித்திரி மகனே

சிக்கல்சிங்காரன் தம்பி
சிங்க வாகனனே
சிதம்பரநாதன் மகனே
சித்தர்கள்தினம் போற்றிடும்
சிந்தை நோகாதருளும்
சியாமள தேகனே

551 சிவசுப்ரமணியன் தம்பி
சிவசக்திவேலன் தம்பி
சிவனருள் குமாரா
சிவகாமியின் மகனே
சிவகுருநாதன் தம்பி
வறுமை அகற்றிடுவாய்
சின்மய சொரூபனே
சீதரன் மகனே
சீரங்கநாதர் சுதா
சீலம் தந்தருள்வாய்

561 சீனிவாஸன் மகனே
சுடர் வடிவானவனே
சுதந்திரம் கொடுப்பாய்
சுத்தசக்திய
சுந்தரேசன் சுதனே
சுந்தரி சுதனே
சுந்தரப்பெருமாள் சுதா
சுப்ரமண்ய சுவாமி தம்பி
சுமுகருக் கிளையாய்
சுயம்புலிங்க நாதாசுதா

571 சுரர் தொழும் நாதனே
சுரபதி கொண்டாடும்
சுரிகை ஆயுதம் தந்த
சுவர்க்கத்தோர் கொண்டாடும்
சூரவதம் செய்தோன் தம்பி

சூரியன் உள்ளொளியே
சூரியன் போற்றியவா
சூரியன் பிரியசுதா
சூர்ப்பகர்ணர் தம்பியே
சூலபாணிசுதனே

581 சூலியின் சுதனே
செகத்தைக் காப்பவனே
செந்தணல் போன்றவனே
செல்வக் களஞ்சியமே
சேஷசயனன் மகனே
சேயல்லவோ நானுனக்கு
சேயாயெமை வளர்
சேவற்கொடியோன் தம்பி
சைதன்ய ஜோதியே
சொக்கநாதன் மகனே

591 சொல்லற்கரியவனே
சோதனை செய்யாதே
சோதிச்சுடரே
சோதி அளிப்பவனே
சோலைமலையான் தம்பி
செளபாக்யம் அருள்வாய்
ஞானவடிவமே
ஞானப்பெரும்நிதியே
ஞானசக்திப்பிரியசுதா
ஞானச்சுடர் ஒளியே

601 ஞானஒளி அருள்வாய்
ஞானமூர்த்தி சுதனே
தங்கம் போன்றவனே
தஞ்சமென்றுனை அடைந்தோம்
தணிகைவேல் முருகன் தம்பி
தண்டாயுதபாணி தம்பி

தந்திரக்காரனே
தமிழால் துதிபாடினோம்
தமிழ்த் தெய்வம் தம்பியே
தரும சொரூபமே

611 தலைவலி தீர்த்தவனே
தவக்கோலம் கொண்டவனே
தனலஷ்மி மகனே
தனஞ்சயன் சுதா
தனகனஞ் சுற்றமுன்
தனித்த இடத்தை நாடும்
தனுர்த்தரன் மகனே
தாமோதரன் சுதா
தாயினும் சிறந்த எந்தாய்
தாயுமானார் மகனே

621 தாரகஸம்ஹாரன் தம்பி
தாழ்மை போதித்தவனே
தானவர் தஞ்சமிட்ட
தானிய லஷ்மி சுதா
திக்குப்பாலர் தினந்துதிக்கும்
தித்திக்கும் செங்கரும்பே
தியாகேஸ்வரர் பிரியசுதா
தியான சித்தியளிக்கும்
திருவேங்கடன் சுதனே
திருக்கழுக்குன்றோன் தம்பி

631 திரிவிக்ரமன் மகனே
திருப்பரங்குன்றோன் தம்பி
திருச்செந்தூர் வேலன் தம்பி
திருமால் மகனே
தில்லைப்பதி மகனே
தீண்டாமை விலக்கிய
தீப தரிசனமே

தீமையைத் தீய்ந்திடச் செய்
தீராவினை யகற்றும்
தீனதயாளுவே

641 தீனதயாபரனே
துக்கத்தை அகற்றுவோனே
துஷ்டரை ரட்சிப்பாய்
துணிவாய் இருக்கஅருள்
துதிப்போரை ஆதரிப்பாய்
தும்பிக்கைதேவன் தம்பியே
துயரை விலக்குவாய்
துர்க்கையின் பிரியசுதா
துன்பம் தொலைப்பவனே
தூசிப்போரை அழிக்கும்

651 தூபதீபப் பிரியனே
தூமகேதுப் பிரியனே
தூய்மை துலங்கிடச்செய்
தெஷிணாமூர்த்தி மைந்தா
தெய்வயானை மணாளன் தம்பி
தெவிட்டாத தேனமுதே
தெளிவுபெறச் செய்வாய்
தேங்காய் நெய்ப்பிரியனே
தேடற் கரியவனே
தேயுலிங்கேஸ்வரர் சுதா

661 தேவசேனாபதி தம்பி
தேவர்தொழும் பாதனே
தேவகி நந்தா சுதா
தேவர் துயர் தீர்த்தவனே
தேவர்ஸஹாயனே
தேவாதி தேவனே
தேவிசபை வாசனே

தேவியின் ஆவிசுதா
தைரியம் அருள்பவனே
தொண்டருக்குத் தொண்டனே

671 தொல்லை தொலைப்பவனே
தோற்றம் அருள்பவனே
தௌலத்தை அடக்குவோனே
நஷ்டத்தைப் போக்கி அருள்
நடனப் பிரியனே
நடராஜன் மகனே
நடந்துவந்தோம் காணஅருள்
நடனம் ஆடுவோனே
நடித்திடச் செய்தவனே
நந்திதேவர் போற்றும்

681 நந்திவாகனன் மகனே
நம்பினோர்க் கருளும்
நரசிம்மானோன் சுதா
நல்லபிள்ளை நீயல்லவோ
நல்லார் விரும்பும்
நற்புகழ் ஓங்கச் செய்யும்
நன்மனைவி அருளும்
நன்மைசெய்யும் அன்பனே
நாகராஜன் போற்றிடும்
நாஸ்திகர் நம்பித்துதிக்கும்

691 நாடகப்பிரியனே
நாடகத்தில் தோன்றியவா
நாட்டிற்கு நன்மைசெய்
நாதகீதப்பிரியனே
நாமகள் போற்றிடும்
நாரணி மகனே
நாராயணமூர்த்தி சுதா
நாராயணன் மருகன் தம்பி

நிருதிதேவன்தொழும்
நிர்மலமூர்த்தியே

701 நிலத்தில் வளம்நிலவு
நினைத்ததை அருளுவாய்
நீங்காதென் உள்ளத்திரு
நீடித்த வாழ்வளிப்பாய்
நீர்வளம் பெருகிடச்செய்
நீலகண்டன் மகனே
நீலியின் மகனே
நுழையாததெல்லாம் நுழைத்தருள்
நூலறிய உணரச்செய்யும்
நூல்கள் இயற்றச்செய்வாய்

711 நெஞ்சினில் கொஞ்சும்
நெய் அபிஷேகனே
நெல்கதிர்கள் விளையச்செய்
நெறிமுறை அருளும்
நேராது தீங்குகள் கா
நேர்மை நிலைக்கச்செய்
நைந்தவருக்கு நலமருளும்
நொந்தவரை நோக்குவாய்
நோன்புநோற்றவனை அடைந்தோம்
பகவதிபாலா

721 பகைவரைத் தொலைத்திடும்
பகைவர் நடுங்கும்
பகைவர் பாதம் பணியும்
பகையை ஒழிப்பவனே
பக்தவத்ஸலனே
பக்தஜனப்பிரியனே
பக்தருக்கனுகூலனே
பஷிராஜன் போற்றிடும்
பஷிவாகனன் மகனே
பசுபதி மகனே

731 பஞ்சலிங்கேஸ்வரன் சுதா
பஞ்சத்தைப் போக்குவாய்
பஞ்ச நதீஸ்வரர் சுதா
பண்புடன் நாவாய்
பண்ணவர் பாடித் துதிக்கும்
பதமலர் பணிவோம்
பதினெட்டாம் படியோனே
பதினெட்டாம் படிக்குமேல்
பதுமையின் மகனே
பத்ரிநாத் பரகன் மைந்தா

741 பக்தருக்கருள்வோனே
பத்ரகாளியின் மகனே
பந்தளமன்னன் மகனே
பம்மையில் தோன்றியவா
பரசுராம் அவதாரன்சுதா
பரஞ்சோதிப் பெருமான் தம்பி
பரமேசுவரன் மகனே
பரமாத்மன் மகனே
பரசுராமருக்கருளும்
பரமகருணாநிதியே

751 பரசேுவரி பாலா
பரசுபாணி புதல்வா
பராசக்தி மகனே
பலமதத்தாரும் பணியும்
பலதெய்வமும் ஒன்றான
பலராமரானேன் மகனே
பலம் எமக்கருளும்
பழனி ஆண்டவன் தம்பி
பழமுதிர்ச்சோலையான் தம்பி
பன்னிருகரன் தம்பியே

761 பாக்யலஷ்மி பாலா
பாண்டுரங்கர் மகனே
பாண்டியராஜ வம்சனே
பாரளத்தோன் மகனே
பாராளும் ராஜனே
பார்த்தசாரதி மகனே
பார்வதியாள் பாலன் தம்பி
பார்வதி மகனே
பார்ப்பாய் எமதுமுகம்
பார்வதி கொழுநன்சுதா

771 பாலசந்தரர் தம்பியே
பாலபிஷேகனே
பாலைக்கிழத்தி பாலா
பாற்கடல் நாதன் மகனே
பிஷாண்டர் பிரியசுதா
பிணிகளைத் தீர்ப்பவனே
பிதாவின் பிரியசுதா
பித்தன் பிரியசுதா
பிரமசரிய விரதப்பிரியா
பிரம்மதேவன் பிரியசுதா

781 பிரஹதீஸ்வரர் சுதா
பிரியமாய்க் காத்தருளும்
பிருதிவிலிங்கன் மகனே
பில்லிசூனியன் அகற்றுவோனே
பிழையைப் பொறுத்தருள்வாய்
பிள்ளைச் செல்வமருளும்
பிறைசூடியோன் மகனே
பினாகபாணி மகனே
பின்முடியில் ஆகாரங் கொண்டோம்
பீடையகற்றிடுவாய்

791 பீதாம் பரதாரி சுதா
புங்கவர் புலியானார்
புஷ்பாலங்காரனே
புட்கலைபுருஷனே
புண்டரிகாஷன் புதல்வா
புண்ணியர் போற்றும்
புதுமைபுகுத்திய
புரவிமேல் பறக்கும்
புரமூன்றெரித்தோன் சுதா
புரந்திரன் புகழ்ந்திட்ட

801 புரந்தன் மகனே
புருஷோத்தமன்சுதா
புலவர் புகழ்ந்து பாடும்
புலித்தோல் உடையோன்சுதா
புலிகூட்டங் கொண்டவனே
புலிப்பாலுக்குச் சென்றாய்
புலிகூட்டத்தோடு வந்தாய்
பூசைஏற்றுக்கொள்வோனே
பூதநாதன்மகனே
பூதப்படைத் தலைவனே

811 பூதநாதஸ்வரனே
பூபாலர் போற்றுவோனே
பூரணைமணாளனே
பூரணசந்திரபிம்பனே
பெரியநாயகிசுதனே
பெரியருள்ளமேவும்
பெரும்வியாதி தீர்த்தவனே
பெருமாள் பிரியசுதா
பெருமை அருள்பவனே
பெற்றவளுக்கு மேலான

821 பெற்றவர்கள் போற்றியவா
பேசாதிருக்கலாமோ
பேதமை அகற்றுவோனே
பேதங்கடந்தவனே
பேயுடன் ஆடிமகனே
பேய்களை ஓட்டுவோனே
பையவே வருகலாமோ
பைரவி மகனே
பொதிகை முனிபோற்றிய
பொருளும் அருளும் தரும்

831 பொன்னம்பல வாசனே
பொன்மலைப் புனிதன் தம்பி
போதந்தரும் புனிதனே
போரூர் முருகன் தம்பி
ப்ரார்த்தலிங்ககேஸ்வரர் சுதா
மஹாலிங்கநாதர் மகனே
மஹாதேவன் மகனே
மஹாலஷ்மி மகனே
மஹிடன்செற்றாள் மகனே
மஹிஷிஸம்ஹாரனே

841 மக்களைக் கொடுத்த
மங்கலம் பொலியும்
மங்கள வாசனே
மங்கைப்பாகன் மகனே
மச்சாவதாரன் மகனே
மஞ்சமாதா போற்றிய
மணிகண்டதேவனே
மணியின் நாதமே
மணிமருந்தருள்வாய்
மண்ணையுண்டோன் மகனே

851 மதத்தை மடியச்செய்த
மதனனை வென்ற அழகா
மதன வடிவமே
மதிநிகர்வதனா
மதுரை தேவிமகனே
மதுபதி மகனே
மந்த்ர மஹிமையே
மந்தர கிரீசன்தம்பி
மமதை அடக்கச்செய்யும்
மயிலம் வடிவேலன் தம்பி

861 மருதமலைவாசன் தம்பி
மலரடி தினம் தொழுவோம்
மலைமகள் மகனே
மலையாள தேசம் வந்த
மலைபோல் கலையருளும்
மலையில் கோயில்கொண்ட
மனமாயை விலக்கிய
மனச்சாந்தியளிக்கும்
மனமகிழ்ந்துதித்தோம்
மனோன்மணி மகிழ்ந்த

871 மன்னருக்கு மன்னனே
மன்னனுக்கு மகனே
மாசிலார் வணங்கும்
மாதப்பிரிய சுதா
மாதவன் மகனே
மாதங்கி மகனே
மாதுர் பூதேச்வரர் சுதா
மாமாயை புதல்வா
மாயையை வென்றவனே
மாயையின் மகனே

881 மாலயனரன் சுதா
மாலினுக்கிளையாள் சுதா

மாலினி மகனே
மானிடமேந்தி மகனே
மீனாஷிசுந்தரர் சுதா
மீனாஷி மகனே
மீனின் விழியுடையாய்
மீனுருக்கொண்டோன் மகனே
முகுந்தன் பிரிய சுதனே
முக்கண்ணி மகனே

891 முக்தர்விரும்பு நேசா
முக்தி அளித்திடும்
முக்கண் மூர்த்தி மகனே
முடத்தைத் தீர்த்தவனே
முத்துக்குமரன் தம்பி
முப்புரமெரித்தோன் சுதா
முருகனுக்கிளையவா
முன்முடியில் உன்காணிக்கை
மூஞ்சூறுவாகன் தம்பி
மூலாதாரச் சுடரே

901 மூவர்க்கும் முதல்வனே
மெய்யான மூர்த்தியே
மெய்யுணர் வளிப்பாய்
மெய்கண்ட தெய்வமே
மேகவாஹனன் வணங்கும்
மேதிச்சென்னி மிதித்தான் சுதா
மேலோர்க்கும் மேன்மைசெய்த
மைம்முகில் விரிந்த மதியே
மொள்ளக்குறை யாதவனே
மோகனக்கதிர்விரியே

911 மோஹினி சுதனே
மௌனிகளுள் வளரும்
யாமளைப்பிரிய சுதா

யோகசித்தி அருளும்
யோகினிதனையா
ராஜ்கோபால் சுவாமிசுதா
ராஜேஸ்வரி மைந்தா
ராமலிங்கன் மகனே
ராமசுவாமி மைந்தா
ராமாவதாரன் மகனே

921 ரிஷிகேசன் மகனே
க்ஷேத்ப சந்நிதியா
லம்போதரன் தம்பியே
லலிதாஸஹஸ்ரநாமப்பிரியா
லீலை புரிபவனே
லோகமாதப் பிரியசுதா
லோகநாதன் சுதனே
வகையாய் வாழ அருள்
வக்ரதுண்டர் போற்றிடும்
வஜ்ரபாணி வணங்கும்

931 வஞ்சத்தைப் போக்கி அருள்
வடபத்ரகாளி மைந்தா
வந்து அருள்புரிவாய்
வயலூர் வடிவேலன் தம்பி
வயிற்றுவலி தீர்த்தவனே
வரந்தரும் அப்பனே
வரதராஜன் மகனே
வராகஉருவன் சுதா
வருணதேவன் போற்றிடும்
வருத்தம் அகற்றுவோனே

941 வல்லணங்கு பிரியசுதா
வள்ளி மணாளன் தம்பி
வறுமையைப் போக்குவோனே
வற்றாதமுத ஊற்றே

வன்மனம் போக்கிடு
வாசுதேவன் மகனே
வாதனை அகற்றிவிடு
வாபரன் தோழனே
வாமனவதாரன் சுதா
வாயுதேவன் வணங்கிடும்

951 வாய்மை மிகுந்திடச் செய்
வாயுலிங்கேஸ்வரர் சுதா
வாவா அருள்புரிவாய்
வாழைபோல் செழிக்கச் செய்வாய்
வாழ்வளிப்பவனே
வாள்கைக்கொண்டான் சுதனே
வானோர் கோமான் போற்றிடும்
வானோருக்கு உபகார
விஜயலஷ்மி சுதனே

961 விஜயப்ரதாபனே
விசாலாஷிமகனே
விஷ்ணுவின் சுதனே
விஞ்ஞானத்தின் விளக்கே
விந்தையின் மகனே
விநாயகமூர்த்தி தம்பி
விபூதி அபிஷேகனே
விமலையின் புதல்வா
விரிமலர்ப் பாதா
விருப்புடன் தொழுவோம்

971 அனை அகற்றுவாய்
வீரராகவன் மைந்தா
வீரச்செல்வி சுதனே
வீராதிவீரனே
வீரியலஷ்மி மகனே
வீரியின் சுதனே
வீறுமிகத்தரும்
வெண்ணை உண்டோன் மகனே

வெள்ளைவாரணன் துதிக்கும்
வெள்ளை நிறத்தாள் சுதா

981 வெற்றி பெற்றிடச் செய்யும்
வெற்றி வடிவேலன் தம்பி
வேங்கடாசலபன் சுதா
வேங்கடேசன் மகனே
வேங்கைமரம் ஆனோன் தம்பி
வேட உருவானவன் தம்பி
வேடஉருக்கொண்டவனே
வேதவடிவோனே
வேதாளிமகனே
வேலனுக்கு அருமைத்தம்பி

991 வேலிறைவன் தம்பியே
வேழமுகன் தம்பியின் தம்பி
வேள்வி வேந்தன் வணங்கும்
வேற்றுமையின்றிப் போற்றிடும்
வைகுண்டநாதன் சுதா
வைக்கத்தப்பன் மகனே
வைத்தியருக்கும் வைத்தியனே
வைத்தியநாதன் மகனே
வைத்தீஸ்வரன் சுதனே
வையமுழுதும் புகழ்

1001 வையாபுரிவாசன் தம்பி
ஜடைமுடி தரித்தோனே
ஜம்புகேஸ்வரர் சுதனே
ஜனார்த்தனன் மகனே
ஜாதி பேதம் போக்கிய
ஜீவாத்மாவே
ஷண்முகனுக்குப் பிரியனே

1008 ஹேரம்பர் தம்பியே



# ஸ்ரீஐயப்பா சுவாமி

## 108 சரணங்கள்

(முதலில் 'ஓம்' என்று தொடங்கி சரண கோஷத்தின் முடிவில் 'சரணம் ஐயப்பா' என்று கூறி முடிக்கவும்)

1. சுவாமியே
2. கன்னிமூல கணபதியே
3. காந்தமலை ஜோதியே
4. ஹரிஹர சுதனே
5. அன்னதான பிரபுவே
6. ஆறுமுகன் சகோதரனே
7. ஆபத்தில் காப்போனே
8. இன் தமிழ்ச்சுவையே
9. இச்சை தவிர்ப்பதுனே

10. ஈசனின் திருமகனே
11. உண்மை பரம்பொருளே
12. உலகாளும் காவலனே
13. ஊமைக்கருள் புரிந்தவனே
14. ஊழ்வினை அழிப்பவனே
15. எளியோர்க்கு அருள்பவனே
16. எங்கள் குலதெய்வமே
17. ஏழை பங்காளனே
18. ஏகாந்த மூர்த்தியே
19. ஐங்கரனின் தம்பியே
20. ஐயமெலாம் தீர்ப்பவனே
21. ஒப்பிலாத் திருமணியே
22. ஒளிரும் திருவிளக்கே
23. ஓங்காரப் பரம்பொருளே
24. ஓதும் மறைப்பொருளே
25. ஔடதம் ஆனவனே
26. சௌபாக்கியம் அளிப்பவனே
27. சலியுக வரதனே
28. சபரிமலை சாஸ்தாவே
29. சிவன்மால் திருமகனே
30. சிவவைணவ ஐக்கியமே
31. அச்சன் கோயில் அரசே
32. ஆரியங்காவு அய்யனே
33. குளத்து புழை பாலனே
34. பொன்னம்பல வாசனே
35. வில்லாளி வீரனே
36. உத்திரத்தில் உதித்தவனே
37. உத்தமனே சத்தியனே
38. பம்பையிலே பிறந்தவனே
39. பந்தள மாமணியே

40. சகல கலை வல்லோனே
41. சாந்தம் நிறை மெயப்பொருளே
42. குருமகனின் குறை தீர்த்தவனே
43. குருட்சணை அளித்தவனே
44. புலிப்பாலை கொணர்ந்தவனே
45. வன் புலியின் வாகனனே
46. தாயின் நோய் தீர்த்தவனே
47. குருவின் குருவே
48. வாவரின் தோழனே
49. துளசிமணி மார்பனே
50. தூயவுள்ளம் அளிப்பவனே
51. இருமுடி பிரியனே
52. எருமேலி சாஸ்தாவே
53. நித்திய பிரம்மச்சாரி
54. நீல வஸ்திர தாரியே
55. பேட்டை துள்ளும் பேரருளே
56. பெரும் ஆணவத்தை அழிப்பவனே
57. சாஸ்தாவின் நந்தவனமே
58. சாந்தி தரும் பேரழகே
59. பேரூர்த்தோடு தரிசனமே
60. பேதையையை ஒழிப்பவனே
61. காளை கட்டி நிலையமே
62. அதிர் வேோட்டுப் பிரியனே
63. ஆனந்த மிகு பஜனைப் பிரியனே
64. கல்லிடும் குன்றே
65. உடும்பாறைக் கோட்டையே
66. இஞ்சிப் பாறைக் கோட்டையே
67. கரியிலந் தோடே
68. கரிமலை ஏற்றமே
69. கரிமலை இறக்கமே

70. பெரியானை வட்டமே
71. சிறியானை வட்டமே
72. பம்பாநிதி தீர்த்தமே
73. பாவமெல்லாம் அழிப்பவனே
74. திரிவேணி சங்கமமே
75. திரு இராமர் பாதமே
76. சக்தி பூஜை கொண்டவனே
77. சபரிக்கு அருள் கொண்டவனே
78. தீப ஜோதித் திரு ஒளியே
79. தீராத நோய் தீர்ப்பவனே
80. பம்பா விளக்கே
81. பழவினைகள் ஒழிப்பவனே
82. தென்புலத்தார் வழிபாடே
83. திருப்பம்பையின் புண்ணியமே
84. நீலிமலை ஏற்றமே
85. நிறைவுள்ளம் தருபவனே
86. அப்பாச்சி மேடே
87. இப்பாச்சிக் குழியே
88. சபரி பீடமே
89. சரங்குத்தி ஆலே
90. உரங்குழி தீர்த்தமே
91. கருப்பண்ண சுவாமியே
92. கருத்த சுவாமியே
93. பதினெட்டாம் படியே
94. பகவானின் சந்நிதியே
95. பரவசப் பேருணர்வே
96. பசுவின் நெய் அபிஷேகமே
97. கற்பூரப் பிரியனே
98. நாகராசப் பிரவுவே
99. மாளிகைப்புரத்து அம்மனே

100. மஞ்ச மாதா திருவருளே
101. அக்கினிக் குண்டமே
102. அலங்காரப் பிரியனே
103. பஸ்மக் குளமே
104. சற்குருநாதனே
105. மகர ஜோதியே
106. மங்கள மூர்த்தியே
107. மோகன ரூபனே
108. சிவசக்தி பாலனே

சுவாமியே சரணம் ஐயப்பா

## மன்னித்துக் காத்தருள்க!


அறிந்தோ, அறியாமலோ, தெரிந்தோ தெரியாமலோ செய்த சகல குற்றங்களையும் பொறுத்துக் காத்தருள வேணும்.

சத்தியமான பொன்னு பதினெட்டாம்படி மேல் வாழும்

காசி, இராமேஸ்வரம், பாண்டி, மலையாளம் அடக்கி ஆளும் ஹரிஹர சுதன் ஆனந்த சித்தன் ஐயன் ஐயப்ப சுவாமியே, சரணம் ஐயப்பா!

சரணம் ஐயப்பா!

# கருப்புச்சாமி



| | |
|---|---|
| கருப்பன் வாரார் கருப்பன் வாரார் | கருப்புச்சாமி |
| அந்த கரிய மேகம் போலே வாரார் | " |
| குதிரை மேலே ஏறிவாரார் | " |
| ஐயா – குதூகலமாய் ஓடிவாரார் | " |
| அந்தாவாரார் இந்தாவாரார் | " |
| ஐயா – ஆனந்தமாய் ஓடிவாரார் | " |
| கட்டுக்கட்டிப் போகையிலே | " |
| ஐயா – காலலாகக் கூடவாரார் | " |
| எரிமேலி சென்றவுடன் | " |
| ஐயா – எதிரே வழி காட்டுவார் | " |
| அழுதை மலை ஏறறத்திலே | " |
| ஐயா – அழகாக நிற்கிறாரே | " |
| உடும் பறைக் கோட்டையிலே | " |
| ஐயா – உருட்டி உருட்டி குளிக்கிறாரே | " |
| வழிநடையாய் போகையிலே | " |

ஐயா – வழிகாட்டி வந்திடுவார் கருப்புச்சாமி
நீலிமலை ஏற்றத்திலே "
ஐயா – நின்றுதவி செய்திடுவார் "
மலையாள தெய்வமய்யா "
ஐயா – மக்களைக் காத்திடுவார் "
பட்டாக்கத்தி கொண்டு வாரார் "
ஐயா – பக்கத்துணையாய் வாரார் "
கச்சைக்கட்டி போகையிலே "
ஐயா – காதிற் கடுக்கனிட்டு "
மீசை முறுக்கி வாரார் "
ஐயா – முடுக்காக ஓடிவாரார் "

(கருப்பன் வாரார்)

## மணம் வீசும் மலைகள்

என்ன மணக்குது எங்கே மணக்குது
எல்லாம் மணக்குது ஐயப்பன் மலையிலே

1. அல்லி மலர் மணமும் எங்கே மணக்குது
ஐயப்ப சுவாமியின் மேலே மணக்குது

2. மல்லிகைப்பூ மரிக்கொழுந்து எங்கே மணக்குது
மரகத மூர்த்தியின் மேலே மணக்குது

3. முல்லை மலர் மணமும் எங்கே மணக்குது
மோகன பாலகனின் மேலே மணக்குது

4. சம்பங்கி ரோஜாவும் எங்கே மணக்குது
சாஸ்தாவான பாலகனின் மேலே மணக்குது

5. பிச்சி இருவாச்சியும் எங்கே மணக்குது
பிரியமுள்ள பாலகனின் மேலே மணக்குது

6. காட்டு மல்லி நாட்டு மல்லி எங்கே மணக்குது
கருணாகர மூர்த்தியின் மேலே மணக்குது

7. குங்குமப்பூ ஜவ்வாது எங்கே மணக்குது
மங்கள மூர்த்தியின் மேலே மணக்குது

8. அத்தர் புனுகு வகை எங்கே மணக்குது
அச்சங் கோவில் அரசனின் மேலே மணக்குது

9. கொழுந்து மனோரஞ்சிதம் எங்கே மணக்குது
குளத்துப்புழை பாலகனின் மேலே மணக்குது

10. பன்னீரும் கஸ்தூரியும் எங்கே மணக்குது
பந்தளத்து செல்வனின் மேலே மணக்குது

11. பரிமள சாம்பிராணி எங்கே மணக்குது
எரிமேலி சாஸ்தாவின் மேலே மணக்குது

12. சாம்பிராணி வாடையது எங்கே மணக்குது
சபரிமலை உச்சியின் மேலே மணக்குது

13. கற்பூர வாடையது எங்கே மணக்குது
காந்தமலை ஜோதியின் மேலே மணக்குது

14. பாங்கான நெய் மணமும் எங்கே மணக்குது
தேங்காயின் திருவுருவின் மேலே மணக்குது

15. தாழம்பூ வாடையது எங்கே மணக்குது
ஸ்ரீதர்ம சாஸ்தாவின் மேலே மணக்குது

16. மஞ்சள் பொடி மகிமை எங்கே மணக்குது
மஞ்சமாதா சன்னிதியின் மேலே மணக்குது

17. சந்தன வாடையது எங்கே மணக்குது
சாஸ்தாவின் சன்னதியில் தானே மணக்குது

18. சர்க்கரை, ஏலம், பாயாசம் எங்கே இனிக்குது
சரணம் சரணம் எனச் சொல்லத்தானே இனிக்குது.

உ

# சாமி சாமி ஐயப்பா



சாமி சாமி ஐயப்பா – சபரிமலை ஐயப்பா

சாமி சாமி ஐயப்பா – சாஸ்தாவே ஐயப்பா
அச்சன் கோவில் அரசனையா சாமி சாமி ஐயப்பா
ஆதரிக்க வேண்டுமையா சபரிமலை ஐயப்பா
(சாமி சாமி)

ஆரியங்காவு ஐயாவே சாமி சாமி ஐயப்பா
ஐயனாக வந்தவரே சபரிமலை ஐயப்பா
(சாமி சாமி)

குழத்துப் புழைப் பாலகரே சாமி சாமி ஐயப்பா
குறைகளையும் தீர்க்க வேண்டும் சபரிமலை ஐயப்பா
(சாமி சாமி)

பந்தளத்து ராஜாவே சாமி சாமி ஐயப்பா
பக்தர்களைக் காக்க வேண்டும் சபரிமலை ஐயப்பா
(சாமி சாமி)

எரிமேலி சாஸ்தாவே சாமி சாமி ஐயப்பா
ஏழைகளைக் காக்க வேண்டும் சபரிமலை ஐயப்பா
(சாமி சாமி)

கணபதியின் தம்பியே நீ சாமி சாமி ஐயப்பா
கவலைகளைப் போக்க வேண்டும் சபரிமலை ஐயப்பா
(சாமி சாமி)

நீலிமலை ஏற்றத்திலே சாமி சாமி ஐயப்பா
நிற்க வச்சுப் பாக்குறியே சபரிமலை ஐயப்பா
(சாமி சாமி)

அழுதா மலையில் நீ சாமி சாமி ஐயப்பா
அழுக வைத்துப் பாக்குறியே சபரிமலை ஐயப்பா
(சாமி சாமி)

பம்பா நதி தீரத்திலே சாமி சாமி ஐயப்பா
பாவமெல்லாம் போக்க வேண்டும் சபரிமலை ஐயப்பா
(சாமி சாமி)

வாபரின் கோட்டை ஐயா சாமி சாமி ஐயப்பா
வரங்களையும் கொடுக்க வேண்டும் சபரிமலை ஐயப்பா
(சாமி சாமி)

தர்ம சாஸ்தா சன்னதியே சாமி சாமி ஐயப்பா
தஞ்சமென்றே வந்தோமய்யா சபரிமலை ஐயப்பா
(சாமி சாமி)

சபரி பீடத்திலிருப்பவனே சாமி சாமி ஐயப்பா
சஞ்சலங்கள் தீர்க்க வேண்டும் சபரிமலை ஐயப்பா
(சாமி சாமி)

பதினெட்டாம் படிக் கருப்பே சாமி சாமி ஐயப்பா
பக்தர்களைக் காக்க வேணும் சபரிமலை ஐயப்பா
(சாமி சாமி)

காந்தமலை ஜோதியப்பா சாமி சாமி ஐயப்பா
காணவே தான் வந்தோமய்யா சபரிமலை ஐயப்பா
(சாமி சாமி)

கற்பூர ஜோதியப்பா சுவாமி சுவாமி ஐயப்பா
கண்டுக்கத்தான் வந்தோமய்யா சபரிமலை ஐயப்பா
(சாமி சாமி)

எங்கள் குல தெய்வமய்யா சாமி சாமி ஐயப்பா
எங்கள் குறை தீர்க்க வேண்டும் சபரிமலை ஐயப்பா
(சாமி சாமி)

சாமி சாமி ஐயப்பா சபரிமலை ஐயப்பா
சபரிமலை ஐயப்பா சாஸ்தாவே ஐயப்பா

# தள்ளாடி தள்ளாடி



தள்ளாடி தள்ளாடி நடை நடந்து – நாங்க
சபரிமலை நோக்கி வந்தோமய்யா

(தள்ளாடி)

கார்த்திகை நல்ல நாளில் மாலையும் போட்டுக்கிட்டு
காலையிலும் மாலையிலும் சரணங்கள் சொல்லிக்கிட்டு
சாமியே! ஐயப்பா! ஐயப்பா! சாமியே!
சரணங்கள் சொல்லிக்கொண்டு வந்தோமய்யா
சபரிமலை நோக்கி வந்தோமய்யா

(தள்ளாடி)

2. இருமுடியைக் கட்டிக்கிட்டு இன்பமாகப் பாடிக்கிட்டு
ஈசன் மகனே உந்தன் இருப்பிடத்தை தேடிக்கிட்டு

(தள்ளாடி)

3. வேட்டைகளும் துள்ளிவிட்டு வேஷங்களும் போட்டுக்கிட்டு
வேடிக்கையாக நாங்கள் ஆட்டங்களும் ஆடிக்கிட்டு
சாமி திந்தகத்தோம் ஐயப்பா திந்தகத்தோம்

(தள்ளாடி)

4. காணாத காட்சியெல்லாம் கண்ணாரக் கண்டுக்கிட்டு
காடுமலைகளெல்லாம் கால்நடையாகத் தாண்டிக்கிட்டு
பம்பையில் குளித்துவிட்டு பாவமெல்லாம் போக்கிவிட்டு
பக்தரெல்லாம் கூடிநின்று பஜனைகள் பாடிக்கிட்டு
(தள்ளாடி)

5. நீலமலை ஏத்தத்திலே நின்று நின்று ஏறிக்கிட்டு
நெஞ்சம் உருகி உன்னை நினைச்சுமே பார்த்துக்கிட்டு
சாமியே! ஐயப்போ! ஐயப்போ! சாமியே
(தள்ளாடி)

6. படியேறிப் போகும்போது பாங்காகக் காய் உடைத்து
பாலனான உந்தனையே பாத்துபாத்து சொக்கிக்கிட்டு
நெய்யிலே குளிக்கும்போது நேரிலேயே பாத்துக்கிட்டு
ஐயா சரணம் என்று அலறியடிச்சிட்டு
(தள்ளாடி)

# கன்னிமாரே, கன்னிமாரே



'ஸ்வாமிமாரே, ஸ்வாமிமாரே எல்லாம் வாருங்க' என்ற மெட்டு

கன்னிமாரே, கன்னிமாரே எல்லாம் வாருங்க
கந்தன் தம்பி கோயிலுக்கே போவோம் .வாருங்க!
கன்னிமாரே கன்னிமாரே எல்லாம்வாருங்க
கந்தன் தம்பி கோயிலுக்கே போவோம் வாருங்க!

மாலை அணிந்து மகர விளக்கை எண்ணிட வேணும்
ஐயன் நகர திருவிழாவை எண்ணிப் புறப்பட வேணும்
மாலை அணிந்து மகர விளக்கை எண்ணிட வேணும்
ஐயன் நகர திருவிழாவை எண்ணிப் புறப்பட வேணும்

கன்னி மூலக் கணபதியைத் தொழுதிட வேணும்
அவன் காவலுடன் அந்த மலை ஏறிட வேணும்
கன்னிமாரே, கன்னிமாரே எல்லாம் வாருங்க
கந்தன் தம்பி கோயிலுக்கே போவோம் வாருங்க!

ஆடை கருப்பு மனது வெளுப்பு
ஆசை மறந்து ஆலயம் நடப்போம்
ஆடை கருப்பு மனது வெளுப்பு
ஆசை மறந்து ஆலயம் நடப்போம்!

மண்டலம் இருந்து, விரதமும் நினைத்து
மணிகண்டன் இருப்பிடம் செல்லுவோம்
கன்னிமாரே, கன்னிமாரே எல்லாம் வாருங்க
கந்தன் தம்பி கோயிலுக்கே போவோம்! வாருங்க

நெய்யிருக்கும் தேங்காயுள்ளே நீயுமிருப்பாய் - நல்ல
நெஞ்சிருக்கும் இடத்திலேயும் தங்கியருப்பாய்
நெஞ்சிருக்கும் தேங்காயுள்ளே நீயுமிருப்பாய் - நல்ல
நெஞ்சிருக்கும் இடத்திலேயும் தங்கியருப்பாய்!

முக்கண் உள்ள தேங்காயுள்ளே உன் சக்தியும் உண்டு
– அந்தச்
சக்தி எந்தன் வழித்துணையாய் நிச்சயமுண்டு
கன்னிமாரே கன்னிமாரே எல்லாம் வாருங்க
கந்தன் தம்பி கோயிலுக்கே போவோம் வாருங்க!

கார்த்திகையில் நாலாவிதப் பூஜையுமுண்டு
மார்கழியில் என்றுமது தொடர்வதுமுண்டு
கார்த்திகையில் என்றுமது தொடர்வதுமுண்டு
மார்கழியில் என்றுமது தொடர்வதுமுண்டு

ஆலயத்தில் கோஷமான சரணம் இருக்கு
ஆண்டவனே உன் துணையோ தினமும் இருக்கு!
கன்னிமாரே கன்னிமாரே எல்லாம் வாருங்க
கந்தன் தம்பி கோயிலுக்கே போவோம் வாருங்க.

எருமேலி வந்தவுடன் காண்போம்
திருமேனி நனைத்து விட்டுச் சரணம் என்போம்

அழுதை மேடு வந்தவுடன் ஆண்டவா என்போம்
அழகன் உங்கள் அய்யப்பனே சரணம் என்போம் - சாமி
கன்னிமாரே கன்னிமாரே எல்லாம் வாருங்க
கந்தன் தம்பி கோயிலுக்கே போவோம் வாருங்க.

புலிவலன் மீது புன்னகையோடு
புகழ்பலப் பாடி மலையில் ஏறுவோம்.
ஸ்வாமிகள் கூடி காட்டினில் ஆடி
சபரியில் கோடித் தீபம் ஏற்றுவோம் - சாமி
கன்னிமாரே கன்னிமாரே எல்லாம் வாருங்க
கந்தன் தம்பி கோயிலுக்கே போவோம் வாருங்க!

நீலிமலை பாறைவழீ ஆலயம் அடைவோம்
நீங்காத பக்தருடன் கூடி மகிழ்வோம்
பதினெட்டு படியேறி ஸ்வாமியே என்போம்
பறந்து விட்ட பாவத்துடன் புனிதமடைவோம் - சாமி

கன்னிமாரே கன்னிமாரே எல்லாம் வாருங்க
கந்தன் தம்பி கோயிலுக்கே போவோம் வாருங்க!
ஸ்வாமி சரணம் ஐயப்ப சரணம்
பகவான் சரணம் பகவதி சரணம்
பகவானே, பகவதியே –

தேகம் பலம் தா – பாதபலம் தா –
தூக்கி விடய்யா ஏந்தி விடய்யா
குண்டுங் குழியும் கண்ணுக்கு வெளிச்சம்
கல்லும் முள்ளும் காலுக்கு மெத்தை
நெய் அபிஷேகம் - ஸ்வாமிக்கே!
யாரைக் காண ஸ்வாமியைக் காண
ஸ்வாமியைக் கண்டால் - மோட்சம் கிட்டும்
ஆனிப் பொன்னும் - ஸ்வாமிக்கே –
தேக பலம் தா – பாத பலம் தா
ஸ்வாமியே ஐயப்போ
ஐயப்போ ஸ்வாமியே!

உ

சிவமயம்

# திருவிளக்கு பஜனை



1. திருவிளக்கே திருவிளக்கே
தேவி பராசக்தி திருவிளக்கே
தேவியின் வடிவே திருவிளக்கே
தேவியே உனக்கு நமஸ்காரம்

2. இருளை அகற்றும் திருவிளக்கே
இன்பம் அளிக்கும் திருவிளக்கே
எங்கும் ஒளிதரும் திருவிளக்கே
லஷ்மி உனக்கு நமஸ்காரம்

3. மங்கள ஜோதியாம் திருவிளக்கே
மாலையில் ஒளிதரும் திருவிளக்கே
காலையில் ஒளிதரும் திருவிளக்கே
சரஸ்வதி உனக்கு நமஸ்காரம்

4. திருமகள் வடிவே திருவிளக்கே
தேவரும் பணியும் திருவிளக்கே
தெள்ளிய ஜோதியே திருவிளக்கே
ஸாரதே உனக்கு நமஸ்காரம்

5. அஷ்டலஷ்மி வடிவே திருவிளக்கே
ஆனந்த நர்த்தனி திருவிளக்கே
ஆலய பூஷணி திருவிளக்கே
ஆதிபராசக்தி நமஸ்காரம்

6. பாக்ய லஷ்மியாம் திருவிளக்கே
பக்தியை அளித்திடும் திருவிளக்கே
பதவியைத் தந்திடும் திருவிளக்கே
பவானி உனக்கு நமஸ்காரம்

7. ஜெகமெல்லாம் விளங்கும் திருவிளக்கே
ஜெகதீஸ்வரி வடிவே திருவிளக்கே
அழகை அளிக்கும் திருவிளக்கே
அம்பா உனக்கு நமஸ்காரம்

8. சௌக்கிய ரூபிணி திருவிளக்கே
சந்தான பலம் தரும் திருவிளக்கே
சம்பத்தை அளிக்கும் திருவிளக்கே
சக்தியே உனக்கு நமஸ்காரம்
ராஜ ராஜேஸ்வரி நமஸ்காரம்

# வேதனைகள் தீருமையா வேலாயுதா




1. வேல் வேல் வேலவனே வேலாயுதா
வேதனைகள் தீருமையா வேலாயுதா
(வேல் வேல்)

2. குன்றத்தில் அமர்ந்தவனே வேலாயுதா
குறைகள் எல்லாம் தீர்த்து வைப்பாய்
வேலாயுதா
(வேல்)

3. அருட்சுடராய் வந்தவரே வேலாயுதா
ஆறுமுகமானவரே வேலாயுதா
(வேல்)

4. செந்தூரில் வாழ்பவனே வேலாயுதா
ஜென்மமதைத் தீர்த்திடுவாய் வேலாயுதா
(வேல்)

5. பழனிமலை வேலவனே வேலாயுதா
பழவினையைத் தீர்த்திடுவாய் வேலாயுதா
(வேல்)

6. பால்குடத்தின் கூட்டமெல்லாம் வேலாயுதா
பார்க்கப்பார்க்க ஆனந்தமே வேலாயுதா
(வேல்)

7. திருத்தணிகை மலை வேலவனே வேலாயுதா
திருவருளை அருளவேணும் வேலாயுதா
(வேல்)

8. காவடிகள் ஆட்டத்திலே வேலாயுதா
கஷ்டமெல்லாம் தீர்ந்து போச்சு வேலாயுதா
(வேல்)

9. சுவாமிமலை வேலவனே வேலாயுதா
சுப்ரமணியமானவரே வேலாயுதா
(வேல்)

10. சோலைமலை வேலவனே வேலாயுதா
சொர்க்கமெல்லாம் தெரியுதப்பா வேலாயுதா
(வேல்)

11. குன்றக்குடி குமரனே நீ வேலாயுதா
சொர்க்கமெல்லாம் தெரியுதப்பா வேலாயுதா
(வேல்)

12. குன்றக்குடி குமரனே நீ வேலாயுதா
குறவள்ளி மணாளனே நீ வேலாயுதா
(வேல்)

13. கருணையோடு காத்தருள்வாய் வேலாயுதா
கந்தா உன்னைத் தெண்டனிட்டோம் வேலாயுதா
(வேல்)

உ

## ஸ்ரீ வைரவக் கடவுள்



ஏடுடைய மலராயனின் ஏறுதலை கிள்ளியவன்

இறுமாப்படக்கு மரசே

கூடுமறை யட்சரக் கோணமெல் லாங்காவல்

கொண்டண்டம் பூத்த தேவே

தேடு நிதி மனை மக்கள் சிந்தனைச் செல்வசுகம்

சிறியேற் கிரங்கி றருள்வாய்

நாடுமடி யார்மனதி லேறிவிளை யாடிவரும்

ஞானவை ரவமூர் த்தியே.




வெகுவிரைவில் வெளிவர இருக்கின்றது

# வேலாயுதம்

## இந்துசமயப்பத்திரிகை

ஆசிரியர் ஷீரடிவேல் பாலாஜி

வெளியீடு : **பாலாஜி பதிப்பகம்**
32 Morrison Road
Hayes.

Designed & Printed @ JR Print, Tel: 0208 503 6643